ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2137/57 - 2019 අගෝස්තු මස 21 වැනි බදාදා - 2019.08.21

*2137/57 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் மூன்றாம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இங்கு முதலாவது அட்டவணையின் நிரல் I இல் குறிப்பாக எடுத்தியம்பப்பட்டுள்ளதும், அதே அட்டவணையின் நிரல் II இல் அதற்கிணையான எல்லை மற்றும் எல்லை வரையறையினைக் குறியீடு மூலம் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளதுமான பிரதேசங்கள் அபிவிருத்தி செய்வதற்கு தகுந்தவை என்பது எனது கருத்து என்பதனால், அப்பிரதேசமானது, அப்பிரிவின் பணிகளுக்காக நகர அபிவிருத்திப் பிரதேசமாகக் காணப்பட வேண்டும் என்ற உத்தரவினை இக்கட்டளை மூலம் அறிவிக்கிறேன்.*

மேலும் இங்கு முதலாம் அட்டவணையின் நிரல் I மற்றும் நிரல் II வரை குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் உட்பட "கொழும்பு துறைமுக நகரம்" பிரதேசமானது, நகர அபிவிருத்திக்கு உகந்த பிரதேசமாகக் கருதப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க (பா. உ.),
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17 மற்றும் 18 ஆம் மாடிகள்,
"சுஹுருபாய", ஸ்ரீ சுபத்திபுர வீதி,
பத்தரமுல்லை,
2019, ஓகத்து 20.


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை 1**

**கொழும்புத் துறைமுக நகரப் பகுதியை நகர அபிவிருத்திப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துதல்**

*நிரல் I*

*நில அளவையாளர் பணிப்பாளர் நாயகத்தினால் 2019.06.11 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட* CO/DSO/2019/370 *ஆம் இலக்கப்படி குறித்துக்காட்டப்பட்டதும் "கொழும்புத் துறைமுக நகரம்" என அழைக்கப்பட்டு அறியப்படுவதும் காணித்துண்டங்கள் 2 முதல் 7 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஹெக்டேயர் 446.6153 பரப்பளவினை உடையதுமான "கொழும்புத் துறைமுக நகரத்தின்" நிரல் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை வரையறையாகக் கொண்டதுமான முழுப் பிரதேசத்தினுடைய எல்லை விவரணங்கள் பின்வருமாறு :-*

| தொடுப்புப் புள்ளி- கொழும்பு மாவட்டம், கொழும்புப் பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கு எல்லை | கிழக்கு ஆயத்தொலைவு | வடக்கு ஆயத்தொலைவு |
|---|---|---|
| வடக்கு தொடுப்புப் புள்ளி | 396913.476 | 492847.764 |
| தெற்கு தொடுப்புப் புள்ளி | 397077.037 | 492290.222 |

*(சான்றாதாரம் : ஆயத்தொலைவு முறைமை : இலங்கைக் கட்டுப் பாட்டு வலை - 1999)*

*நிரல் II*

*மொத்த நிலப்பரப்பானது கீழ்வரும் எல்லைகளினால் சூழப் பட்டுள்ளது :*

*வடக்கு :* *காணித்துண்டம் 01 இலிருந்து தெற்கு எல்லைக்கூடாக கிழக்குத் திசை நோக்கி வடக்கில் காணித்துண்டம் 07 இனை எல்லையாகவும், காணித்துண்டம் 01 இனை தெற்கு எல்லையாகவும் உடைய புள்ளி யினை தொடர்புபடுத்தும் வகையில் தெற்கு எல்லைக் கூடாக கிழக்குத் திசையின் காணித்துண்டம் 01 இனை நோக்கி ;*

*கிழக்கு :* *மேற்குறிப்பிட்ட வடக்கு எல்லையின் இறுதிப் புள்ளியிலிருந்து காணித்துண்டம் 1 இன் மேற்கு எல்லையின் இறுதிப்புள்ளி வரை மற்றும் அந்தப் புள்ளியிலிருந்து மேற்கு எல்லைக்கூடாக சைத்திய வீதியின் மற்றும் அந்தப் புள்ளியிலிருந்து காணித்துண்டம் 7 இன் மேற்குத் திசை நோக்கி ;*

*தெற்கு :* *மேற்குறிப்பிட்ட புள்ளியிலிருந்து தெற்குத் திசைக்கூடாக காணித்துண்டம் 7 இனை நோக்கி ;*

*மேற்கு :* *தெற்குத் திசையின் காணித்துண்டம் 7 இலிருந்து, மேற்கு எல்லையின் காணித்துண்டம் 7 இற்கூடாக, ஆரம்பப் புள்ளியை அடையும் வரை தொடுக்கப் படுதல்.*

*09-88*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.